தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**5 வயதுப்பிரிவு**
(01.01.2017 – 31.12.2017 வரையில் பிறந்தோர்)

## தமிழ் என் அடையாளம்

என் தாய்மொழி தமிழ். அதுவே என் அடையாளம். உயிரும் மெய்யுமாக என்னை இயக்கும் அன்னைமொழி. அறத்தையும் வீரத்தையும் என்னுள் வளர்க்கும் என் தாய்மொழி.

கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எமது இனத்தின் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள் என்று சொன்னவர் தலைவர் மாமா. அவற்றைக் காக்கத் தங்கள் உயிர் தந்தவர் மாவீரர். அவர்களே எங்கள் வழிகாட்டிகள். தமிழ் எம் அடையாளம் என்று சொல்வோம். தமிழராகத் தலைநிமிர்ந்து நாம் வாழ்வோம்.

நன்றி,
வணக்கம்.